அனுப்புநர்

சா. சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும்
இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி.

**ந.க.எண். 019373 /எப்1/2021** **நாள். 16.03.2022**

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மே 2022 – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:03.01.2022
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.19.01.2022 மற்றும் 02.02.2022

------

பார்வை 1–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், மே 2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் **04.01.2022 முதல் 19.01.2022** வரையிலான நாட்களில் தங்களது பள்ளியில் +1 பயிலும் அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினையும் இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகக் கடிதங்களில் மேற்குறிப்பிட்ட பணிக்கான கால அளவு **05.02.2022** வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி மே 2022 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான G.R Number அடங்கிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து, திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் **18.03.2022 பிற்பகல் முதல் 23.03.2022 வரையிலான நாட்களில்** www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மே 2022 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கரின் G.R Number அடங்கிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து, அப்பட்டியலில், மாணாக்கரது பெயர், பிறந்ததேதி, பெற்றோர் / பாதுகாவலர் பெயர், புகைப்படம், மொழிப்பாடம் மற்றும் பாடத்தொகுப்பு எண் ஆகிய விவரங்களில் திருத்தங்கள் இருப்பின், **19.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நாட்களில்** பள்ளித் தலைமையாசிரியர்கள் அத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

2. **பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.**

3. 2021–2022 கல்வி ஆண்டிற்கான மேல்நிலை முதலாம் ஆண்டு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெயர்ப்பட்டியலில் (Nominal Roll) எவரேனும் சேர்க்கை விடுபட்டிருப்பின் பெயர்ப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

4. மேலும், மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களது பயிற்று மொழியில் (Medium of Instruction) திருத்தங்கள் இருப்பின் அவற்றினை உரிய கடிதம் மற்றும் இணைப்புகளுடன் **24.03.2022–க்குள்** dgef4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

**நகல்:**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்